## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.27/2015

Deposition of Witness PW2

| | |
|---|---|
| Name | : நாராயணசாமி |
| Father's Name /W/o | : ராஜி ரெட்டி |
| Religion | : இந்து |
| Caste | : MBC |
| Calling | : விவசாயம் |
| Address | : மாங்காட்டுசேரி கிராமம் ,அரக்கோணம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.02.2019

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

வாதி தயானந்த முதலியாருக்கு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலகெடுவிற்குள் மீதி பணமாகிய ரூ.8500 கொடுத்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. வாதி மீதி பணத்தை கொடுத்துவிட்டாரா என்று நான் எதுவும் கேட்கவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ள ஷரத்துக்கள் பற்றி எனக்கு தெரியும். ஒப்பந்தத்திற்கு பிறகு தயானந்த முதலியாரை வாதி பார்த்தது கிடையாது என்றால் சரிதான். வாதி கொடுத்ததாக சொல்லும் பணம் குறித்த விவரம் வாதி சொல்லி தான் தெரியும். தயானந்த முதலியாருக்கு மாங்காட்டுசேரியில் சொந்தமாக வீடு உள்ளது. மேற்படி வீட்டை அவர் சீனிவாச முதலியாருக்கு விற்றார். மேற்படி ஆவணத்தை பார்த்தால் விற்பனை குறித்த விவரத்தை தெரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் செல் வைக்கும் பொழுது நான் எந்த சாட்சி கையொப்பமும் போடவில்லை. இந்த வழக்கில் வாதி என் சகோதரர் என்பதால் அவர் சொல்லி கொடுத்தவாறு பொய்யான ஒரு வாக்குமூலம் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் வாதி எந்த பணமும் செலுத்தவில்லை என்றும், கிரைய ஒப்பந்தத்தில் வைக்கப்பட்டுள்ள செல்கள் போலியானவை என்றால் சரியல்ல.